Registered as a Newspaper

பெண்மணிகளுக்கும்
சிறுவர் சிறுமியருக்கும்
ஏற்ற
இறக்குமதி செய்யப்பட்ட
நவீன
புடவை தினுசுகளுக்கும்
றெடிமேட்
ஆடைகளுக்கும்
புகழ் பெற்றவர்கள்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னாகம்.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை: ரூ. 1-25

குறுகிய காலத்தில்
மக்களின்
நன்மதிப்பையும்
ஆதரவையும் பெற்ற
ஒரே ஜவுளி நிறுவனம்
இளவரசி
S12, நவீன சந்தை,
சுன்னாகம்.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹு ஆனி மீ 29 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 16 (13 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 195

# வடமராட்சியில் நேற்று முழுதும் படைகள் - புலிகள் உக்கிரப் போர்

### ஒரு கோடி துண்டுப்பிரசுரம்

கொழும்பு, ஜூலை 13

உள்ளூராட்சித் தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரி ஒரு கோடி துண்டுப் பிரசுரங்கள் தேர்தல் தொகுதி வாரியாக விநியோகிக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை ஐந்து எதிர்க் கட்சிகளின் கூட்டணியின் இணைப்புக் கமிட்டி எடுத்துள்ளது. (உ–எ)

முச்சந்தி முரளி



டிசம்பர் 19க்கு மேலே போக ஏலாது எண்டதைச் சொல்லுறதுக்கே ஆறு மாதம் பிடிச்செண்டால் பிரச்சினையைத் தீர்க்க ஆறு வருஷம் போதுமோ என்னவோ...!

## பாரமில்லாத படகில் கனடாவுக்குச்சென்ற 150 ஈழத் தமிழ் அகதிகள்

ஒட்டாவா, ஜூலை 13

நூற்றைம்பதுக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று கனடா அத்திலாந்திக் கரையோரத்தில் உள்ள நோவொஸ்கோட்டியா பகுதியை படகு ஒன்றில் சென்றடைந்தனர்.

பாரமில்லாத படகு ஒன்றில் இந்தத் தமிழ் அகதிகள் வந்தடைந்தனர் என்று (4ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு சட்டத்தை அமுல்செய்து கடும் வானத் தாக்குதல்கள்

### பல இடங்களில் இராணுவத்துக்கு இழப்பு; மக்கள் முற்றுமுழுதாக இடம்பெயர்வு

— உதயன் வடமராட்சி செய்தியாளர் —

வடமராட்சி, ஜூலை 13

வடமராட்சியின் பல பகுதிகளிலும் நேற்றுக் காலை தொடக்கம் மாலை வரை ஆயுதப் படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கும் இடையில் உக்கிரமாக நேரடி மோதல் நிகழ்ந்தது.

காலை ஆறு மணி முதல் ஊரடங்கை அமுல் செய்து ஆயுதப் புடையினர் ஹெலி, அவ்ரோ ஆகியவற்றைக் கொண்டு கடும் வானத் தாக்குதல்களை நடத்தினர்.

அந்தத் தாக்குதல்களின் மத்தியிலும் புலிகள் பதிலடி கொடுத்து தாக்குதல் நடத்திப் பல இடங்களில் இராணுவத்தினரை முகாம்களுக்குள் திருப்பி அனுப்பினர்.

இராணுவத் தரப்பில் பல இடங்களில் இழப்பும் ஏற்பட்டது. போராளிகள் இராணுவத்தினரை விரட்டிய இடங்களில் ஆயுதங்களை மீட்டனர்.

யாழ்ப்பாண வானொலி மூலம் காலை 6 மணி முதல் ஊரடங்கு அமுல் குறித்து அறிவிக்கப்பட்டது. இரண்டு மணித்தியால நேரத்திற்குள் மக்களை கோவில்களில் தஞ்சம் புகுமாறு கேட்கப்பட்டது.

ஆனால் சென்ற மே மாத ''ஒப்பறேஷன் லிபறேஷன்'' அனுபவத்தைக் கொண்டு மக்கள் அப்படிச் செய்யவில்லை.

தமது வீடுகளில் இருந்து வெளியேறிவெளி இடங்களுக்குச் சென்றனர். வயோதானவர்களும் நோயாளர்களும் கூட பன்னுங்குகளில் வைத்துத் தூக்கிச் செல்லப்பட்டதை நான் நேரில் கண்டேன்.

நேற்றைய சம்பவத்தோடு வடமராட்சி மக்கள் எல்லோருமே இடம் பெயர்ந்து விட்டனர். இப்போது அது மக்கள் அரவமற்ற பிரதேசமாக வெறிச்சோடிக் கிடக்கிறது.

மக்கள் பெருமளவில் தென்மராட்சிக்கும் அச்சுவேலி, ஆவரங்கால் ஊடாக வேறு பகுதிகளுக்கும் நேற்று இடம் பெயர்ந்து விட்டனர்.

நேற்றைய மோதலில் மூன்று ஹெலிகளும், இரண்டு அவ்ரோ விமானங்களும் குடியிருப்புகளை நோக்கித் தாக்குதல் நடத்தின. எங்கும் ஒரே புகை மண்டலமாக இருந்தது.

### புலிகள் வீர வணக்கம்

வளலாய் இராணுவ முகாமில் இருந்து நேற்று வெளியேறிய சிப்பாய்களுடனான நேரடி மோதலில் லெப்டினன்ட் குட்டிக்கண்ணு(மானிப்பாய்) வீரமரணமடைந்தார்.

இவருக்கு வீர வணக்கம் தெரிவித்து புலிகள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். (உ)

மோதல் நேற்றுக் காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகியது. இச்செய்தி மாலை 4 மணிக்கு எழுதப்படும்போதும் மோதல் தொடர்ந்தது.

நேற்றைய மோதலில் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

### ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

விடுதலைப் போராட்டத்தையும் விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்கக் கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் ஊர்வலம் நடைபெற்றது.

ஒட்டுமடம் சனசமூக நிலையம், ஆத்திசூடி கலைமகள் ச.ச.நிலையம், ஐயனார் கோயிலடிசன சமூக (4 ஆம் பக்கம் பார்க்க)

## டிச.19 யோசனையை விட கூடிய எதையும் அரசு முன்வைக்காது

கொழும்பு, ஜூலை 13

★ டிசம்பர் 19 யோசனைகளிலும் பார்க்கக் கூடுதலாக அரசு எதையும் முன்வைக்காது.

★ டிசம்பர் 19 யோசனைகளை மேலும் பேச்சுக்கள் நடத்துவதற்கான அடிப்படையாகவும் அரசு ஏற்றுக்கொள்ளாது.

இப்படி கொழும்பு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன என்று கொழும்பு 'ஐலண்ட்' ஞாயிறு இதழ் செய்தி வெளியிட்டது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின் அமைச்சர்சள் லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா ஆகியோர் இந்தியத் தூதர் டிக்ஷித்தை (4 ஆம் பக்கம் பார்க்க)

## உடுப்பிட்டியில் மகளிர் கல்லூரி குண்டினால் தகர்ப்பு

வடமராட்சி, ஜூலை 13

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

சனிக்கிழமை இரவுஇச் சம்பவம் இடம்பெற்றது.

வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பறேஷன் லிபறேஷன்' நடவடிக்கைகளுக்குப் பின்னர் இக்கல்லூரிக் கட்டடம் இடையிடையே சிப்பாய்களின் முகாமாகப் பாவிக்கப்பட்டு வந்தது.

கல்லூரிக் கட்டடத்தைத் தகர்த்தவர்கள் யார் என்பது தெரியவரவில்லை. (உ–160)

## பொலிகண்டி முகாம்மீது பெரும் தாக்குதல்

வடமராட்சி, ஜூலை 13

பொலிகண்டி மினி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்று பெரும் தாக்குதல் நடத்தினர். முகாம் முற்றாகச் சேதப்படுத்தப்பட்டதுடன் நான்கிற்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பல சிப்பாய்கள் ஹெலிக்கொப்டர்கள், அவ்ரோ விமானங்கள் பாதுகாப்புக் கொடுக்க பருத்தித்துறை இராணுவ முகாமிற்குத் தப்பிச்சென்றனர்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து மக்கள் குடியிருப்புக்களை (4 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலி ம. வி. மீது பொம்மர் தாக்குதல்

அச்சுவேலி, ஜூலை 13

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் மீது பொம்மர் விமானம் நேற்று குண்டுவீசி அகலச் சேதப்படுத்தியது.

பிற்பகல் 2.45 மணியளவில் அச்சுவேலிப்பகுதியை சுற்றிவட்டமிட்ட பொம்மர்விமானம் அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் மீது இரண்டு குண்டுகளை வீசியது.

குண்டு வீச்சினால் மகாவித்தியாலய கட்டடம், அருகில் உள்ள தென்னிந்திய திருச்சபை தேவாலயம் ஆகியன பலத்த சேதமடைந்தன.

குண்டுகள் பாடசாலை அதிபரின் காரியாலயத்திற்கும் தேவாலயத்திற்கும் அருகில் நின்ற மாமரத்தின் மீது விழுந்ததினால் கட்டடத்திற்கு ஏற்படவிருந்தபெரும் சேதம் கணிசமான அளவு தவிர்க்கப்பட்டது.

### ஹெலி நோட்டம்

குருநகர் ஜூலை 13

நேற்று முன் தினம் நண்பகல் 12 மணியளவில் நாவற்குழியில் இருந்து மணியம்தோட்டம் ஊடாகத் தாழப் பறந்து சென்ற ஹெலிக்கொப்டர் ஒன்று பூநகரி–கல்முனைக் கரையோரமாக இருதடவைகள் நில மட்டத்திற்குப் பதிந்து அந்தரத்தில் ஸ்தம்பித்து நின்று நோட்டம் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## நாகர்கோவிலிலும் ஹெலித் தாக்குதல்

வடமராட்சி, ஜூலை 13

நாகர்கோவில் பகுதியிலும் நேற்றுக் காலை பத்து மணி தொடக்கம் ஹெலித்தாக்குதல் நடைபெற்றது.

ஹெலிக்கொப்டரின் 50 கலிபர் தாக்குதலினால் பல பொதுமக்கள் உயிரிழந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக முடியாத நிலை இருப்பதாகவும்–

காயமுற்றோருக்கு விடுதலைப் புலிகள் முதலுதவி அளித்து வருவதாகவும் முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (உ–160)

# இடைக்காட்டில் கண்ணிவெடி!

## ஆறு சிப்பாய்கள் பலி; பலர் காயம்

வடமராட்சி, ஜூலை 13

நேற்றுக் காலை 9-30 மணியளவில் தொண்டமானாறில் இருந்து வளலாய் நோக்கிச் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சில சிப்பாய்கள் தப்பி ஓடினர்.

சிப்பாய்கள் வந்த ட்ரக் ஒன்று இடைவழியில் பலத்த சேதத்திற்குள்ளான நிலையில் அப்படியே நிற்கின்றது.

இடைக்காடு வெங்காயச் சங்கத்திற்கு முன்னால் பலாலி வீதியில் இந்தக் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது பெரும் தொகையான ஆயுதங்கள் புலிகளினால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து பொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களும், ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகமும், அவ்ரோ (4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

13-07-1987

திங்கட்கிழமை

சுபநேரம்:– 11.59 முதல் 1.29 வரை

ராகுகாலம்:– 7.29 முதல் 8.59 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## சிலிண்டர் தாக்குதலில் "செயின்டோஸர்" சேதம்

இராணுவத்தினரின் "செயின் டோஸர்" ஒன்று, புலிகளின் சிலிண்டர் தாக்குதலுக்கு இலக்காகி பெரும் சேதத்திற்கு உள்ளானது.

கடந்த சனிக்கிழமை மாலை நான்கு மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

திக்கம் பனம் பொருள் தொழிற்சாலைக்கு அண்மையில் நடந்த இந்த சிலிண்டர் தாக்குதலின் பின் நேரடிச் சமரும் இடம் பெற்றது.

சிப்பாய்களுக்கு பாதுகாப்பாக ஹெலிக்கொப்டரும் வட்டமிட்டது.

புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சிப்பாய்கள் திரும்பிச்சென்றனர்.

## முல்லைத்தீவில் ராணுவம் கண்ணிவெடியில் சிக்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 13

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது போராளிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

இதனால் இராணுவத்தினர் ரோந்து சென்ற கவச வாகனம் ஒன்று முற்றாகச் சேதமுற்றதாகவும் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்துமுல்லைத்தீவு மாவட்டத்தில் திடீர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவை அடுத்து இராணுவத்தினர் சேதமடைந்த கவச வாகனத்தையும் சிப்பாய்களையும் மீட்கும்பணியில் ஈடுபட்டு வருவதாகவும்–

இதனை எதிர்த்துப் போராளிகள் கடும் தாக்குதல் நடத்திவருவதாக (4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் [illegible] வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
★ சின்னஞ்சிறு ★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

**விற்பனைக்கு**

வட்டுக்கோட்டையில் L. P. காஸ் விற்பனைக் குண்டு விற்பனையாளர்; ஸ்ரீ முருகன் அரிசி ஆலை, (பாய் மில்) மூளாய் ரோட், வட்டுக்கோட்டை (3218)

28-7-87, செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கால்நடை வைத்தியர் காரியாலயத்தில் ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் (பேடு, சேவல் இறைச்சிக்குஞ்சு) விநியோகிக்கப்படும். பெற விரும்புவோர் தமது கால்நடை வளர்ப்போர் சங்க கிளைகளிடமோ, யாழ். கால்நடை வளர்ப்போர் சங்க உறுப்பினர்களிடமோ, யாழ் கால்நடை வைத்திய காரியாலயத்திலோ 2?-7-87 க்கு முன்பு முற்பணம் செலுத்தி பதிவு செய்து கொள்ளவும். (1274)

## ★ சிறுமிக்கு ஏற்பட்ட அனுபவம்

கொடிகாமம், ஜூலை 13

பாடசாலையிலிருந்து வீடுதிரும்பிய 10 வயதுச் சிறுமி ஒருவரின் காதணியை வீதியால் வந்த சைக்கிள்காரர் ஒருவர் அபகரித்தார்.

இச்சம்பவம் கச்சாயில் இடம் பெற்றது.

சிறுமி பாடசாலையிலிருந்து நடந்து வந்து கொண்டிருந்தார்.

சைக்கிள்காரர் ஒருவர் சைக்கிளை நிறுத்தி வரும்படிகேட்டார்.

கடும் வெயிலாகஇருந்ததால் சிறுமியும் நம்பி சைக்கிளில் ஏறினார்.

சிறுமியைப் பற்றை மறைவில் கொண்டு போய் காதணிகளைக் கழற்றிக் கொண்டு அந்த நபர் தப்பிச் சென்றுவிட்டார். (இ-75)

## பருத்தித்துறைவீதி மோசமான நிலையில்

வடமராட்சி, ஜூலை 13

நீண்டகாலமாக அச்சுவேலி— பருத்தித்துறை வீதி குண்டும் குழியுமாக மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது.

இதனால் இவ்வீதியில் செல்லும் வாகனங்கள் திடீர் திடீரென பழுதடையும் நிலை உருவாகியிருக்கிறது.

இவ்வீதியைத் திருத்துவதற்கு பெருந்தெருக்கள் திணைக்களத்திற்கு பணம் ஒதுக்கியும், திருத்தவேலைகள் நடைபெறுமல் இருப்பதற்கான காரணம் என்னவென அப்பகுதி மக்கள் கேட்கிறார்கள். (உ-160)

## பற்றுச்சீட்டு உ. அ. அதிபர் பணிமனையில்

திருநெல்வேலி கிராம சேவகரால் விநியோகிக்கப்பட்ட நிவாரணப்படிவங்களின் பற்றுச் சீட்டுக்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்தே வழங்கப்படுகின்றன.

பற்றுச்சீட்டுக்காக உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குச் செல்ல வேண்டி இருப்பது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (இ-143)

★ குவைத் ★

பிரயாண ஒழுங்குகள்

LABOURERS உடன் தேவை

- ✶ சம்பளம்: 40 K.D
- ✶ இலவச தங்குமிடம்
- ✶ இலவச உணவு வசதி
- ✶ 4 வருட ஒப்பந்தம்
- ✶ 2 வருட முதிர்வின் பின் LEAVE வசதி
- ✶ திரும்பிச் செல்லும் பிரயாணச் சீட்டு வசதி
- ✶ இம்மாத இறுதியில் பிரயாணம்

முக்கிய-குறிப்பு:

15 ஆம் திகதிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைத்துச் செல்ல இருப்பதால் உடன் வரவும்.

முன்பு விண்ணப்பம் செய்தவர்கள் PASS PORTS கொடுத்தவர்கள் தலைமை அலுவலக FREE SELECTION இன்னமும் செய்யாத எல்லோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

மிகவும் முக்கியம்:

இன்றிலிருந்து யாபேரும் நேரடியாக எம்மிடம் தொடர்புகொள்ளவும். வேறு பிரதிநிதிகள் ஊடாக வரும் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

தலைமைச் செயலகம்:

Construction & Development Company Ltd.

37, S. DE.S. JEYASINGHE MAWATHA NUGEGODA.

Labour Licence No. 96

தொடர்பு:

V. P Balasubramaniam (V. P. BALA)

C/o N. V. PONNUTHURAI School Lane, KONDAVIL.

### தொடர்ந்தும் ஆயிரக்கணக்கில்

# வடமராட்சியிலிருந்து மக்கள் இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 13

வடமராட்சிப் பகுதியில் இருந்து நேற்று முன் தினமும் பெரும் எண்ணிக்கையான மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

சனிக்கிழமையன்று மட்டும் சுமார் 3 ஆயிரத்து 500 பேர் ஆகும். ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி ஆகிய பகுதிகளுக்கும்—

3 ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் தென்மராட்சிப் பகுதிக்கும் இடம் பெயர்ந்தனர்.

நேற்றும் யாழ்ப்பாண வானொலி மூலம் வடமராட்சிப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்தனர்,

ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டிப் பகுதி அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் இவர்கள் தஞ்சம் புகுந்து வருகின்றனர். (உ-119)

## விசேட சேவை அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்பு

வட்டுக்கோட்டை, ஜூலை 13

யாழ். மாவட்டத்தில் விசேட சேவை அலுவலர்களாகக் கடமையாற்றி கிராம சேவை அலுவர்களாகப் பதவி மாற்றம் செய்யப்பட்டவர்களுக்கான கிராம சேவையாளர் பயிற்சி வகுப்புக்கள் நாளை முதல் 17 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ள இப் பயிற்சி வகுப்பில் கிராம சேவையாளர்களுக் கான கடமைகள், உரிமைகள் அவர்கள் பொது மக்களுடன் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் பற்றி விளக்கமளிக்கப் படவுள்ளன. (உ-161)

### ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டியில்

# 9 முகாம்களில் 10 ஆயிரம் அகதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 13

வடமராட்சிப் பகுதியில் இருந்து வெளியேறி ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டிப் பகுதிகளில் ஒன்பது முகாம்களில் தஞ்சம் புகுந்திருக்கும் சுமார் பத்தாயிரம் பொது மக்களை அச்சுவேலிப்பகுதி ஆரம்ப சுகாதார நிலையத் தொண்டர்கள் பராமரித்து வருகின்றனர்.

மில்க்வைற் ஸ்தாபனம், சர்வோதய ஸ்தாபனம் போன்றன சுகாதார நடவடிக்கைகளுக்கு உதவி வருகின்றன.

ஆவரங்கால் நடராச இராமலிங்கம் வித்தியாலயம், புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம், அச்சுவேலிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆவரங்கால் வெங்காயச் சங்கக் கட்டடம் புத்தூர் அமெரிக்கன் மிஷன் பாடசாலை, புத்தூர் அன்னசத்திரம், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர் சிவன் கோயில், சிறுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்பாடசாலை, சிறுப்பிட்டி அரசினர் வித்தியாலயம் என்பவற்றிலேயே மேற்படி முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன. (உ 119)

# தமிழரது இன்னல்களை இந்தியாவிற்கு விளக்குவோம்

## இந்திய செஞ்சிலுவைப் பிரதிநிதி உறுதி

வட்டுக்கோட்டை, ஜூலை 13

இங்குள்ள அகதிகளுக்கு மனிதாபிமானமான முறையிலேயேநாம் உணவுப்பொருள்களை வழங்குகின்றோம். இங்குள்ள தமிழ்மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு எந்தவகையல் உதவி செய்ய வேண்டும் என்பவற்றையெல்லாம் செஞ்சிலுவைச் சங்க விதிகளுக்கமைய இந்தியா சென்று தெரிவிப்போம்

வட்டுக்கோட்டை பிரசைகள் குழுவினால் நடத்தப்படும் அகதிகள் முகாமிற்கு விஜயம் செய்து அங்குள்ள அகதிகளுக்கு உணவுப் பொருள்களை விநியோகிக்கும் போது செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. மோகன் நாராயணன் மேற்கண்டவாறுகூறினர்

வட்டுக்கோட்டை கிழக்கு தாவளை தமிழ்க் கலவன் பாடசாலையில் உள்ள அகதிகள் முகாமில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

வைபவத்திற்கு வட்டுக்கோட்டை பிரசைகள் குழுத் தலைவரும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முன்னுள் அதிபருமான திரு, ந. சிவஞானம் தலைமைவகித்தார்.

வட்டுக் கிழக்கு கிராம சேவை அலுவலர் திரு. ஆ. முருகேசு, சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்த கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. தர்மராஜா, சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம், வட்டு கிழக்கு ஆரம்ப சுகாதார அபிவிருத்திச்சபை செயலாளர் சமாதான நீதிவான் திரு. கி. வைரமுத்து, வட்டுக்கோட்டை பிரசைகள் குழுச் செயலாளர் திரு. ச. குலசூரியன் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் திரு. இ. விஜயரத்தினம், திரு. எஸ். சிவானந்தராஜா ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். (உ-161)

# தமிழ், முஸ்லிம் மக்கள் பிரிந்து நின்றால் உரிமைகளைப் பெறமுடியாது

## பொத்துவில் எம்- பி- கூறுகிறார்

அம்பாறை, ஜூலை 13

"சிறுபான்மையாகிய தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். நாம் பிரிந்து எமது பலவீனத்தை வெளிக்காட்டினால் உரிமைகளை வென்றெடுக்க முடியாது".

—பொத்துவில் தொகுதி முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம். ஐ. உதுமாலெவ்வை மேற்கண்டவாறு கூறினர்

அட்டாளைச்சேனை, கோணவத்தை களப்பு நன்னீர் மீன்வளர்ப்புத் திட்டத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

ஜனாப் எம். சீ. ஆதம் கண்டு தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் ஜனாப் உதுமாலெவ்வை தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

"எம்மிடையே பிரிவு வளர்வதால் நாமே நஷ்டமடைவோம். இன்று நாம் வென்றெடுக்க வேண்டிய உரிமைகள் பலவுள்ளன.

இளைஞர்கள் தீர்க்கதரிசனமாகச் சிந்தித்து எமது இனங்களின் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும்.

ஒற்றுமை இன்றேல் எமக்கு விமோசனமே இல்லை" என்றார். (இ-14)

# திருகோணமலையிலும் செவன நடைபவனி

திருகோணமலை, ஜூலை 13

பிரதம மந்திரியின் செவன சமாதான நடைபவனி திருகோணமலையிலும் கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்றது.

சுமார் முந்நூறு பேர் வரை இதில் கலந்து கொண்டனர்.

பிரதிக் கோட்டை [illegible] சர்வோதய இயக்க அலுவலகத்தில் இருந்து நடைபவனி ஆரம்பமாகி மணிக்கூண்டு கோபுர வழியாக நகர சபைக்கு அருகில் கடற்கரையை வந்து அடைந்தது.

அரச அதிபர் டி. எம். ஆரிய ரத்தின, உதவி அரச அதிபர் திரு எஸ். கோணமலை, ஐ. தே. க. மாவட்ட அமைப்பாளர் [illegible] சா திரு. நெல்சன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (உ-எ150)

## சங்கீத பயிற்சி வகுப்பு

வட்டுக்கோட்டை, ஜூலை 13

வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மானிப்பாய் வட்டாரங்களில் உள்ள பாடசாலைகளில் சங்கீதம் கற்பிக்கும் சங்கீத ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் இன்றும் நாளையும் யாழ். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்

கல்வி அதிகாரி (சங்கீதம்) திரு. சு. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இப்பயிற்சி வகுப்பில் [illegible] ஆசிரியர் திரு. எஸ். திலகநாயகம் போல் விரிவுரையாற்றுவார். (உ-161)

## கிண்ணியா மூதூரில் போட்டி

திருகோணமலை, ஜூலை 13

மூதூர், சந்தளாய், கிண்ணியா ஆகிய இடங்களில் உள்ள பிரதேச சபைகளுக்கு ஐ. தே. க. அணிகளும் சுயேச்சை அணிகளும் போட்டியிடுகின்றன.

மொறவேவ, கோமரங்கடவல, தம்பலகமம், பதவியா- ஸ்ரீபுர, திருகோணமலை நகரம் ஆகிய இடங்களில் உள்ள பிரதேச சபைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சி மட்டுமே வேட்பாளர் பட்டியல்களைத் தாக்கல் செய்தது. (உ-எ-150)

## கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்

பலாலி, ஜூலை 13

கடந்த ஜூன் 14 ஆம் திகதி ஷெல் விழுந்து சேதமுற்ற கட்டுவன்புலம் மகாவித்தியாலயம் இன்று 13 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் அதே இடத்தில் இயங்கத் தொடங்கும் என அதன் அதிபர் திரு. க. இராசதுரை அறிவித்துள்ளார்.

இதுவரை மல்லாகம் மகாவித்தியாலயத்தில் இது தற்காலிகமாக இயங்கியது குறிப்பிடத்தக்கது. (இ-119)

## ஜனநாயகத்துக்கு ஆபத்து

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

—எதிர்க்கட்சிகள் கூட்டாக விடுத்த அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தேசிய அமைப்பாளர் விஜய குமாரணதுங்க, கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் கே. பி. சில்வா, மக்கள் ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளர் தினேஷ்குணவர்த்தன ஆகியோர் கையெழுத் திட்டுள்ளனர். (உ-எ)

# இசைக்கலை இன்றும் நிலைக்கக்காரணம்யார்?

மானிப்பாய், ஜூலை 13

சங்கீதத்தின் பொருளறிந்து அதன் நிலையிலிருந்து கீழிறக்காமல் கச்சேரி செய்யும் நாதஸ்வரக் கலைஞர்களால் தான் இசைக்கலை இன்றும் நிலைத்திருக்கின்றது.

-இவ்வாறு பழம் பெரும் நாதஸ்வரக் கலைஞர் இணுவிலூர் என். ஆர் கோவிந்தசாமிப் பிள்ளைக்கு உடுவிலில் நடைபெற்ற பாராட்டு விழாவில், இந்திய சங்கீத வித்துவான் 'கானப் பிரியா' எஸ். என். நடராஜன் கூறினர்.

கடந்த அறுபது ஆண்டுகளாக நாதஸ்வர உலகில் தனியிடம் வகித்த திரு. என். ஆர். கோவிந்தசாமிப்பிள்ளை நோய் காரணமாக மீண்டும் தொழில் செய்ய முடியாமல் இருக்கும் நிலையில் அவரின் சேவையைப் பாராட்டி உடுவில் சிவஞான வாரியம் கௌரவித்தது.

சிவஞான வாரியத் தலைவர் திரு. வா. முத்துக்குமாரசாமி சர்மா விழாவுக்கு தலைமை வகித்து திரு. கோவிந்தசாமிப்பிள்ளையை கௌரவித்துப் பொன்னுடை போர்த்தினர்.

'கானப்பிரியா' எஸ். என். நடராஜன் பாராட்டுரை வழங்குகையில் மேலும் கூறியதாவது:-

இசைக்கலைக்கு ஒரு தரம் உண்டு. அந்தத் தரத்திற்கு கீழாகசென்று கச்சேரி செய்பவர்கள் உண்மையான கலைஞர்கள் அல்ல. திரு. கோவிந்தசாமிப்பிள்ள இசைக் கலையின் தாமறிந்து கீழ் நிலைக்குச் செல்லாமல் நாதஸ்வரம் வாசித்ததனுல்தான் இன்று மக்களும், கலை ரசிகர்களும் அவரைப் பாராட்டுகின்றனர் கௌரவிக்கின்றனர்-என்றார்.

திரு என். ஆர். கோவிந்தசாமிப்பிள்ளைக்கு, உடுவில் சிவஞான வாரியத்தின் சார்பாக 'லயநாத வாரிதி' என்ற பட்டத்தை கானப்பிரியா எஸ். என். நடராஜன் வழங்கினர்.

திரு. சபா. ஆனந்தர், எம் எஸ். ஸ்ரீ தயாளன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர். (உ-90)

# உணவு, உடை வழங்கி அகதிகளுக்கு உதவுக

## புனர்வாழ்வு நிறுவனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13

வடமராட்சிப் பகுதியில் இருந்து வெளியேறி அயற்கிராமங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு அத்தியாவசியமாக உணவுடன், உடைகளும் தேவைப்படுகின்றன.

ஆகவே நிதி மற்றும் உடை, உணவுப்பொருட்களை வழங்கி ஆதரவு நல்குமாறு பொதுமக்களிடம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் இயங்கும் சனசமூக நிலையங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், தொழிற்சங்கங்கள், பாடசாலையைச் சார்ந்தவர்கள் இப்புனித பணியில் ஈடுபட்டு, இந்த வேண்டுகோளை செயற்படுத்தி உதவுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. (உ)

# பலாலி முகாமிலிருந்து தொடர்ந்துஷெல் தாக்கு

பலாலி, ஜூலை 13

பலாலி இராணுவ முகாமில் இருந்து தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் (சனிக்கிழமை) இரவு ஏவப்பட்ட புதிய வகை 'ஷெல்' தூர இடங்களுக்கும் சென்று விழுந்து வெடித்து பல சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

பலாலியில் இருந்து இரண்டு வெடிச்சத்தங்களுடன் கிளம்பும் இந்த ஷெல் குண்டுகள் 'ஜெட்' போன்ற இரைச்சலுடன் காற்றைக் கிழித்துச் சென்று தூர இடங்களில் விழுந்து வெடிக்கின்றன.

'நேற்று முன் தினமிரவு விளான், இளவாலை, வடலியடைப்பு, அளவெட்டிப் பகுதிகளில் இவ்வகையான 'ஷெல்கள்' விழுந்து வெடித்து சேதங்களை ஏற்படுத்தின.

இதே வேளை, தொண்டமானாறு வயாவிளான், பலாலி முகாம்களில் இருந்தும் நேற்று அதிகாலையில் ஏவப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் அச்சுவேலியிலுள்ள ஊரியான், வண்ணாசிராய், வல்லைவெளி, பத்தமேனிப் பகுதிகளில் விழுந்து வெடித்ததால் மக்கள் பதற்றமடைந்தனர்.

இதனால் நாவற்காட்டுப் பகுதி மக்கள் பலர் இரவோடிரவாக ஆவரங்கால் சிவன் கோயில், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரிபோன்ற இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றனர். (உ-119)

## பட்டிருப்பில் ஐ. தே. க. போட்டியிடும்

மட்டக்களப்பு, ஜூலை 13

பட்டிருப்புத் தொகுதி இடைத்தேர்தலில் ஐ. தே. க. போட்டியிடுமென எதிர்பார்க்கப் படுகிறது.

ஐ. தே. க. வேட்பாளராக தற்போது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் பணிபுரியும் கிராமசேவை அலுவலகரொருவர் நிறுத்தப் படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

# அரச ஊழியர்களுக்கான கடன் ஆசிரியர்களுக்குக் கிடைக்குமா?

## ஒரு வருடமாக பலன் ஏதுமில்லை

வட்டுக்கோட்டை, ஜூலை 13

பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு இரண்டு வருட அடிப்படைச் சம்பளத்தைக் கடனாக வழங்கும் திட்டத்தின் கீழ் டன்பெற விண்ணப்பித்த ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் ஒரு வருடத்திற்கு மேலாகியும் அக்கடன் கிடைக்காததனால் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட விவரங்களைக் குறிக்கும் பொலிஸ் அறிக்கைகளை கூட இவர்கள் தமது விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பியிருந்தனர்.

யாழ் கல்வித் திணைக்களம் இவர்களது விண்ணப்பங்களைப் பரிசிலனை செய்து சரியான விண்ணப்பங்களுக்குப் பிணை நிற்கக் கூடிய இரண்டு ஆசிரியர்கள் உறுதியுரைகளையும் பெற்றிருந்தது.

இன்றைய இக்கட்டான சூழ் நிலையில் பெரும் சிரமத்துடன் — முத்திரைச் செலவுடன்— பொலிஸ் அறிக்கையைப் பெற்றுக் கொடுத்ததோடு இரண்டு ஆசிரியர்களைக் கல்வித்திணைக்களத்திற்கு அழைத்துச் சென்று உறுதியுரையையும் பெற்றுக்கொடுத்தும் பலன் ஏதும் கிடைக்கவில்லை என்று ஆசிரியர்கள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.

இக்கடனைப் பெற்றுக் கொடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

இக்கடன் ஏனைய திணைக்களங்களைச் சேர்ந்தபெரும்பாலான அரச ஊழியர்களுக்கும் கல்வித் திணைக்களத்தின் ஆசிரியர் அல்லாத ஏனைய ஊழியர்களுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-161)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

கடின உழைப்பும் கட்டுப்பாடும் வறுமையை விரட்டி அடிக்கும் சாட்டைகள்.

— டெக்சோ


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

13.07.1987 த.பெ.இல: - 23


## பாதிப்புகளும் தரவுகளும்

மே மாதம் நடத்திய தாக்குதலில் இடைக்காடு — பத்தமேனிப் பகுதியில் மட்டும் 24 பேர் கோரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இரண்டு பேர் ''காணமற்போய்''விட்டார்கள்.

சம்பவம் நடந்த வேளையில் முற்கொண்டு கிடைத்த தகவல்களின்படி குறைந்த எண்ணிக்கையினரே கொலையுண்டதாக நம்பப்பட்டது.

ஆனால் இடைக்காடு — பத்தமேனி பிரசைகள் குழு மேற்கொண்ட முயற்சியால், சரியான எண்ணிக்கை தெரிய வந்துள்ளது. சம்பவத்தின் போது நாசமாக்கப்பட்ட வீடுகள், சேதமாக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள், அழிக்கப்பட்ட பயிர் நிலங்கள், வான் பயிர்களுக்கு ஏற்பட்ட அழிவு, சேதமடைந்த பாடசாலைகள், பூசை இன்றிக் கிடக்கும் ஆலயங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அளவு, விளைவு என்பவற்றை எல்லாம் பிரஸ்தாப பிரசைகள் குழு தகவல் திரட்டி தொகுத்து அறிக்கையாக வெளியிட்டிருக்கிறது.

எத்தனை ஆண்டுகள் சென்றாலும், இடைக்காடு — பத்தமேனிப் பகுதியில், 1987 மே மாத இறுதியில் இராணுவம் நடத்திய அட்டூழியத்தின் விளைவுகளை எடுத்துக் காட்டக் கூடியதாக அந்த அறிக்கை அமைந்துள்ளது.

இந்த நல்ல முன் உதாரணத்தை எல்லாப் பிரசைகள் குழுக்களும் பின்பற்ற வேண்டும். இன்றைய சம்பவம் நாளைய சரித்திரம். இன்று நடப்பதை உரிய முறையில் தகவல் திரட்டிப், பதிவு செய்து, தொகுத்து, ஆவணப்படுத்தி வைக்காவிடில் நாளை அது மறந்த நிகழ்ச்சியாகி விடும். நடந்த சம்பவங்களின் விளைவுகளை கூட்டிக்குறைக்கவும் அல்லது இருட்டடிப்புச் செய்யவும் முயல்வோரை முறியடிக்க இதுபோன்ற அறிக்கைகள் அவசியம்.

வருடக் கணக்காகத் தொடர்ந்து இடம் பெறும் இராணுவ அட்டூழியங்களின் - அனர்த்தங்களின் - பாதிப்புகளைப் பற்றிய விவரத் தொகுப்புகள் நிச்சயம் தயாரிக்கப்பட்டாக வேண்டும். பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து பெறப்படும் உண்மையான தகவல்களையும், பாதிக்கப்பட்ட,சேதமடைந்த இடங்களை நேரில் சென்று பார்த்து ஒவ்வொரு சிறிய தரவு முதல் பெரிய விவரம் வரையான தகவல்களையும் அவற்றை நிறுவக்கூடிய அத்தாட்சிகளுடனும் திரட்டித் தொகுப்பது மிக அவசியம்.

அந்தந்தப் பகுதிப் பிரசைகள் குழுக்களே இந்தப் பணியைச் செய்வது இலகுவாக இருக்கும். கிராம மட்டத்தில் தொகுக்கப்படும் தரவுகள், பின்னர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டங்களிலும், மேலும் பிரதேச மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் விஷய வாரியாகத் தொகுக்கப்பட வேண்டும்.

இந்தத் தரவுகள், அறிக்கைகள் மாவட்ட மட்டத்திலும், பிரதேச மட்டத்திலும், கிராம மட்டத்திலும் ஏற்பட்ட பாதிப்புகளை தெட்டெனக் காட்டக் கூடியனவாக தொகுத்து வகுத்து ஆண்டு மாத அடிப்படையில் ஒரே ஆவணமாக்கப்பட வேண்டும். பிரசைகள் குழுக்களின் ஒன்றியங்கள் இந்தப் பணியைச் செய்ய முன்வரவேண்டும்-

இவ்வாறான அறிக்கைகள் இருந்தால் தான் அரசாங்கம் கூறும் பொய்களை முறியடித்து உண்மையான பாதிப்புகளை, அழிவுகளை உலகத்துக்கு எடுத்துக் காட்ட முடியும். சர்வதேச நிவாரண மற்றும் தொண்டர் நிறுவனங்களுக்கு எடுத்துச் சொல்லிப் புனர்வாழ்வு, புனருத்தாரண உதவிகளைப் பெற முடியும்.

இந்த அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு அந்தந்தத் துறை சார்ந்தவர்களின் உதவியும் பிரசைகள் குழுக்களுக்குத் தேவைப்படும். உதாரணமாக வர்த்தகத் துறைக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் சேதங்களைத் திரட்ட அந்தத் துறை சார்ந்தவர்களினதும், அமைப்புக்களினதும் ஒத்துழைப்பு அவசியம்.

மொத்தத்தில் தமிழ்ப் பகுதிகளை, தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் இராணுவ நடவடிக்கையால் உண்டாகும் பாதிப்புக்களை, சேதங்களை, நஷ்டங்களை திரட்டித் தொகுத்து ஆவணப்படுத்த வேண்டியது முக்கியமான தேசியப் பணி என்று கூறலாம்.

ஆனால் அதன் முக்கியத்துவத்தை இது வரை எவரும் உணர்ந்ததாக இல்லை. குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட துறையில், உண்டான பாதிப்பு விவரம் என்ன என்று வெளியார் ஒருவர் கேட்டால் உடனடியாகத் தரவுகளை முன்வைக்கக் கூடிய நிலையில் எந்த ஸ்தாபனமும் இருப்பதாகத் தெரியவில்லை. புனர்வாழ்வு நிறுவனங்களாவது இவற்றைச் சீராகத் தொகுத்து வைத்திருக்கின்றனவா என்பது சந்தேகமே.

எங்கள் மக்களுக்கு, எங்கள் மண்ணுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அவலங்களை ஆவணப்படுத்தும் இந்தப் பணியை பிரசைகள் குழுக்களும், புனர்வாழ்வு நிறுவனங்களும், தொண்டர் ஸ்தாபனங்களும் இணைந்தாவது செய்ய வேண்டும் இது உடனடித் தேவை. இன்று நாளை என்று ஒத்திவைக்கப்படக் கூடியது அல்ல.

# இந்தியாவில் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு இன்று

## வியாழனன்று முடிவு

புதுடில்லி, ஜூலை 13

இந்திய ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறுகிறது. முடிவுகள் எதிர் வரும் வியாழக்கிழமை வெளியிடப்படும்.

வாக்குகள் எண்ணப்படுவது வியாழன் காலை புதுடில்லி நாடாளுமன்றச் செயலகத்தில் ஆரம்பமாகும்.

இன்று நடைபெறும் தேர்தல் முடிந்தவுடன் வாக்குப் பெட்டிகள் மாநிலங்களில் இருந்து புதுடில்லிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தத் தேர்தலில் ஆளும் இந்திரா காங்கிரஸின் வேட்பாளராக தற்போதைய உப ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனும், எதிரணிகளின் வேட்பாளராக ஆர். கிருஷ்ண ஐயரும்,மிலேஷ் குமார் என்பவரும் போட்டியிடுகின்றனர். (உ-எ)



வி. ஆர். கிருஷ்ணஐயர்



ஆர். வெங்கட்ராமன்

## விசாரணை ஆரம்பம்

ராவல்பிண்டி, ஜூலை 12

அமெரிக்க விமானம் ஒன்றைக் கடத்தியது -22 பயணிகளைக் கொன்றது— ஆகிய குற்றச்சாட்டுக்களின்மீது ஐந்து பாலஸ்தீனியருக்கு எதிரான விசாரணையை பாகிஸ்தான் நீதிமன்றம் ஒன்று கடந்த சனிக்கிழமை ஆரம்பித்தது.

ராவல்பிண்டிச் சிறையில் ஐந்து பலஸ்தீனியர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சென்ற ஆண்டு இக் கடத்தல், கொலைச்சம்பவம் இடம்பெற்றது. (உ-எ)

# ஆபிரிக்க காங்கிரஸ் போராட்டத்தை தீவிரப்படுத்த முடிவு

செனகல், ஜூலை 12

தென்னாபிரிக்காவில் பெரும்பான்மை இன ஆட்சியை ஏற்படுத்தும் போராட்டத்தை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தீவிரப்படுத்தப்படும்.

—இப்படி ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர்கள் தங்களைச் சந்தித்த தென் ஆபிரிக்க வெள்ளைநிற அரசியல்வாதிகள் குழுவிடம் தெரிவித்தனர்.

கறுப்பு இன பெரும்பான்மை இன ஆட்சி ஏற்படும் பட்சத்தில் அதன் கீழ் சிறுபான்மைஇனத்தவரின் கலாசாரம் பாதுகாக்கப்படும் என்றும் ஆபிரிக்கத் தலைவர்கள் உறுதி கூறினர்.

இதனிடையில் தென் ஆபிரிக்க நகரங்களில் வாழும் கறுப்பு இன மக்களிடையே தேர்தல் ஒன்றை நடத்தி ஆலோசனைச் சபை ஒன்றை நியமிக்கும் வெள்ளைநிற அரசின் யோசனையை ஆபிரிக்க தேசிய காங்கிரஸும் ஏனைய கறுப்பு இன அமைப்புக்களும் முற்றாக நிராகரித்து விட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

ஈரான் கூறுகிறது

# மரணப் பொறியில் அமெரிக்காவாம்!

தெஹ்ரான், ஜூலை 12

குவைத் எண்ணைக் கப்பல்களுக்கு அமெரிக்கக் கொடிகளை வழங்கி பாதுகாப்பு கொடுக்கும் திட்டம் மரணப் பொறிக்குள் அமெரிக்கப்படையினரை மாட்டிவைக்கும்.

–தெஹ்ரான் வானொலி இப்படி அறிவித்தது.

உயிரிழக்கும் அமெரிக்கப் படையினரின் சவப் பெட்டிகளையும் இன்னும் பல அமெரிக்கக் கொடிகளையும் அனுப்பிவைக்க வேண்டியநிலைதான் அமெரிக்க அரசுக்கு ஏற்படும்.

வியட்நாம் லெபனான் படிப்பித்த பாடத்திலும் பார்க்க மறக்க முடியாத பாடத்தை அமெரிக்கா வளைகுடாவில் படிக்கப்போகின்றது.

– இப்படி தெஹ்ரான் வானொலி மேலும் தெரிவித்தது.

ஈரானின் பீரங்கிப் படகு ஒன்று அமெரிக்க எண்ணைக் கப்பல் ஒன்றை கடந்த வியாழன் தாக்கியது.

இது சம்பந்தமாகக் கருத்து வெளியிடுகையில் –

குவைத் எண்ணைக் கப்பல்களுக்கு அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் பாதுகாப்பு வழங்கும் திட்டம் செயற்படுவதை இத் தாக்குதல் நிறுத்தி விட முடியாது' – என வாஷிங்டன் அரசு அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-எ)

## அமைச்சரின் உறவினர்களும் கைது!

சண்டிகார், ஜூலை 12

பஸ் பயணிகள் கொல்லப்பட்டதை அடுத்து ஹரியானா மாநிலத்தில் குழப்பம் விளைவித்தனர் என்ற சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்ட 125 பேரில் மத்திய அமைச்சர் பஜன்லாலின் இரண்டு உறவினர்கள் அடங்கியுள்ளனர்.

தனது உறவினர்கள் காரணமின்றிக் கைது செய்யப்பட்டனர் என்று மத்திய அமைச்சர் பஜன்லால் தெரிவித்திருக்கிறார்.

இது குறித்து நீதிபதி ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், உறவினர்கள் குற்றவாளியாகக் காணப்பட்டால் மத்திய அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்யத் தாம் தயாராக இருப்பதாகவும் திரு. பஜன்லால் அறிவித்திருக்கின்றார். (உ-எ)

# அமெரிக்கத் திட்டம் வெளியாகின்றது

வாஷிங்டன், ஜூலை 12

ஈரானுக்கு ஆயுதங்களை விற்று வந்த லாபத்தைக் கொண்டு உலகின் பல பாகங்களில் இரகசிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டிருந்தது.

ஈரான் ஆயுத பேர விசாரணையில் சாட்சியமளிக்கையில் கேர்ணல் ஒலிவர் நோர்த் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

அமெரிக்க சி. ஐ. ஏ. தலைவராக இருந்து அண்மையில் மரணமான வில்லியம் கேஸி என்பவரின் மேற்பார்வையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவிருந்தன — இப்படி திரு. ஒலிவர்நோர்த் மேலும் தெரிவித்தார். (உ-எ)

## ஆப்கனில் யுத்தநிறுத்தம் நீடிப்பு

காபூல், ஜூலை 12

ஆப்கானஸ்தான் அரசு ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை மேலும் ஆறுமாத காலத்துக்கு நீடிக்கப்போவதாக அறிவித்திருக்கின்றது.

ஏற்கனவே ஆப்கன் அரசு அறிவித்த ஆறு மாத கால யுத்தம் இந்த வாரத்துடன் முடிவடையும். (இ-எ)

# குண்டுகளை வீசி மக்களை அழித்து இறைமையைக் காக்க முடியுமா?

## பிரதமர் பிரேமாவிடம் கேள்வி

இனப்பிரச்சினைக்கு முழு அளவிலான இராணுவத்தீர்வு காண இலங்கை அரசு முயற்சிப்பது புத்திசாலித்தனமான காரியமல்ல.

இப்போதைய தேவை வன்செயல்களுக்கு முடிவு காண்பதே ஆகும். இதற்கு யுத்த நிறுத்தம் ஒன்று அவசியம்.

பிரதம மந்திரி என்ற முறையில் திரு. பிரேமதாஸா பொறுப்புள்ள பங்காற்ற வேண்டும்.

''அரசியல் தீர்வுக்காக ஸ்ரீலங்கா அரசு யுத்தம் நடத்தவில்லை; நாட்டின் இறைமை, பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவே சண்டையிடுகிறது''— இப்படி பிரதமர் பிரேமதாஸா கூறுகின்றார்.

இப்படிச் சொல்வதன் மூலம் பிரதமர் பிரேமதாஸா தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கின்றார்.

தமிழர் பகுதிகள் மீது விமானங்கள் மூலம் குண்டுகளைப் பொழிந்தும், குடிமக்களை அழித்தும் நாட்டின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் ஒரு அரசாங்கத்தினால் பாதுகாத்துக்கொள்ள முடியுமா?

அமைதியை மீண்டும் கொண்டுவர காலம் பிந்தவில்லை என்பதை திரு. பிரேமதாஸா தெரிந்துகொள்ளவேண்டும்.

அமைதி திரும்பினால் மட்டுமே மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிப்பது சாத்தியமாகும்.

தமிழர் பிரதிநிதிகளுக்கும் அரசுக்கும் இடையே பேச்சுக்களை ஒழுங்கு செய்வதில் புதுடில்லி பெரும் பங்காற்ற முடியும் என்பதை திரு. பிரேமதாஸா உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தியர்வில் இருந்து வெளியாகும் 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையில் வெளிநாட்டுப் பதிப்பில் இலங்கைப் பிரச்சினை பற்றி வெளியான ஆசிரியர் தலையங்கம் இங்கு பிரசுரமாகின்றது.

இந்தியாவுடன் நட்புறவைப் பேணவேண்டும் என்பதற்காக எமது மக்களுக்கு நாம் துரோகம் செய்ய முடியாது—

இப்படி திரு. பிரேமதாஸா கூறுகின்றார்.

பிரதமரின் நிலைப்பாடு எப்படி இருந்தாலும்—கொழும்பு, புதுடில்லிக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றது என்பது ஜனாதிபதி ஜெயவர்த்தன கடைசியாகப் பிரதமர் காந்தியுடன் 30 நிமிடங்கள் தொலைபேசியில் உரையாடியது காட்டுகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனுடன் பிரதமர் காந்தி தீவிர ஆலோசனைகள் நடத்திவருவது ஸ்ரீலங்காப் பிரச்சினையில் புதுடில்லி காட்டும் அக்கறையையே வெளிப்படுத்துகின்றது.

மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாவிடின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவே முடியாது. ★

## அறிஞர் வரிசை வந்த கணேசையர்

யாழ்ப்பாணம், ஜூலை13

ஈழத்தில் அறிஞர்கள் பலர் காலத்திற்குக் காலம் வாழ்ந்திருக்கிறார்கள். அந்த வரிசையில் ஒருவர் தான் புன்னாலைக்கட்டுவன் வித்துவ சிரோமணி பிரம்மஸ்ரீ கணேசையர் அவர்கள்.

ஊரெழு மதி கலைஞர் வட்டத்தின் (மகவம்) இலக்கிய ஒன்று கூடல் வைபவத்தில்—

பிரம்மஸ்ரீ கணேசையர் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி உரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா மேற்கண்டவாறு கூறினார்.

மகவம் அமைப்பாளர் திரு. வேல் அமிர்தன் தலைமையில் நடைபெற்ற இந்த இலக்கிய ஒன்று கூடல் வைபவத்தின் ஆரம்பத்தில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக மொழியியற்றுறை சிறப்பாய்வாளர் திரு. க. வீரகத்தி திருவள்ளுவர் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை சூட்டினார்.

திரு. சி. பாலசுப்பிரமணியம் 'மணிமொழிக் கதைகள்' நூலின் வெளியீட்டுரையையும் திரு. க. வை. தனேஸ்வரன் அறிமுகவுரையையும் திரு. க. வீரகத்தி 'வள்ளுவம் வளர்க்கும் மனிதம்' என்ற ஆய்வுரைத் தொடரை ஆரம்பித்து வைத்தார்.

கவிஞர் மாவை சி. சத்தியகுமாரன் நன்றியுரை நிகழ்த்தினார். (இ)



### பொய்யாமொழி

**குறள்:**

அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.

**பொருள்:**

அறம், பொருள், இன்பம், உயிர்க்காக அஞ்சும் அச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராயப்பட்ட பிறகே ஒருவன் (ஒரு தொழிலுக்கு உரியவனாகத்) தெளியப்படுவான்.

## சமய சந்நிதிகளில்

### கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை13

வட்டுக்கோட்டை சங்கரத்தை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் புதிய மணிக்கோபுரம் கட்டப்பெற்று இன்று திங்கட்கிழமை காலை 9-20 மணிக்கும் 10-15 மணிக்கும் இடையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள் கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்திவைப்பார்.

சிற்பசாகரம்திரு. வி. தம்பிராசாவினால் நிர்மாணிக்கப்பட்ட இம் மணிக்கோபுரத்துக்குரிய ஓவியங்களை வர்ணக் கலையரசு க. சுந்தரலிங்கம் வரைந்துள்ளார். (உ)

### துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இலட்சார்ச்சனை

சாவகச்சேரி,ஜூலை 13

சாவகச்சேரி நுணாவில் மேற்கு தாழையம்பதி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் இலட்சார்ச்சனை இம்மாதம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும்.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் இலட்சார்ச்சனையின் பூர்த்திவிழா 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறும். (இ-31)

## விசித்திரம்

வாரும் முரளியார்! என்ன இண்டைக்குக் கொஞ்சம் பிந்தேரமாய் வந்திட்டீர்?

ஓம், கதையளைக் கேட்டுக் கையோடை ரீ வியும் பாக்கிற யோசினை போலை.

ரூபவாஹினியிலை என்னத்தைப் பாக்கப்போறாய்? அவை அடிக்கடி புத்த விகாரையளைத் தான் காட்டுவினம். அதைப்பாத்துக் கொண்டிருக்கச் சரி-

அவையின்ரை ஒவ்வொரு செய்தி அறிக்கையிலும் குறைஞ்சது இரண்டு விகாரை நிகழ்ச்சியள் இல்லாமல் இருக்காது.

போன ஞாயிற்றுக்கிழமை 15நிமிஷ செய்தி அறிக்கையிலை மொத்தம் அஞ்சு விகாரை நிகழ்ச்சியள். ஒண்டிலை பெரியவர். அடுத்ததிலை ரூபவாஹினி அமைச்சர், அதுக்கு அடுத்ததிலை காணி அமைச்சர்போதாததுக்கு லண்டனில் பிரேமதாசாவும் பெண்சாதியும் கலந்து கொண்ட விகாரை நிகழ்ச்சி எண்டு வந்திது.

ரீ. வி. செய்தி எண்டால் மந்திரிமார் கலந்து கொள்ளுற நிகழ்ச்சியளைப் பிரசித்தப்படுத்துறது தான் எண்டு நினைக்கினம். அதுக்கு அடுத்தது புத்தவிகாரைக்கு ஸ்தாபி வைக்கிறதும் தியான மண்டபத்துக்கு அத்திவாரம் போடுறதும் தான் செய்தி எண்டும் நினைக்கினம். புத்த விகாரை நிகழ்ச்சியளைப் போலை அடுத்த மத நிகழ்ச்சியள், ரீ. வியிலை வாறதுகண்டிருக்கிறியே? ஆடியிலை ஒருக்கா அமாவாசையிலை ஒருக்காக் கோயில் நிகழ்ச்சியும், சேர்ச் அல்லது பள்ளிவாசல் நிகழ்ச்சியும் வரும்.

இதிலை பின்னுக்கு ஒரு 'ஐடியா' இருக்கு! புத்த மதம் தான் இஞ்சை தேசிய மதம் எண்டு நிலைநிறுத்திறதும், பாசுகிறவை மீது அந்த மதத்தைப் பற்றிய தகவல்களைத் திணிக்கிறதும் தான் அந்த 'ஐடியா'!

மற்றநாட்டு ரீ.வியளிலை உப்பிடியே செய்தி அறிக்கையிலை மதத்தைப் புகுத்திறுங்கள்?

★ ★ ★

பாத்தியா தமிழ்நாட்டிலை சண்முகம் எண்ட பொலீஸ்காரர் ஆடாமல் அசையாமல் தண்ணீரிலை மிதந்து உலக சாதனையை நிலைநாட்டியிருக்கிறார்!

அவர்மட்டுமே, கிட்டடியிலை ஜெயராமன் எண்டவரும் ஒரு உலக சாதனையை நிலைநாட்டிக் கின்னஸ் புத்தகத்திலை இடம் பிடிச்சிருக்கிறார்! அவர் இடைவிடாது தொடர்ந்து பேசி அந்தச் சாதனையை நிலைநாட்டினார்!!

அவருக்கு அப்பிடி ஒரு சாதனையை நிலைநாட்ட வேணும் எண்ட ஆசை வந்ததே ஒரு ருசிகரமானது!

ஜெயராமன்ரை மூத்த பெடியன் ஒரு சஞ்சிகையிலை வந்திருந்த குறிப்பு ஒண்டை வாசித்தானாம். அதிலை வெளிநாட்டார் ஒருத்தர் தொடர்ந்து பேசினதிலை சாதனை நிலைநாட்டியதாக ஒருகுறிப்புப் போடப்பட்டிருந்ததாம்.

அதைக்கேட்ட ஜெயராமனின் கடைசிக் குட்டி 'உதென்ன பிரமாதம்? எங்கடை அப்பாவும் அப்பிடிப் பேசுவாரே' எண்டுகூறியதை அறைக்குள் நிண்ட ஜெயராமன் கேட்டுவிட்டார!

பிள்ளையின் ஆசையை நிறைவேற்ற வேணும் எண்ட எண்ணம் ஏற்பட்டதாலை தான் தொடர்ந்துபேசிற பயிற்சியைத் தான் ஆரம்பிச்சதாக ஜெயராமன் சொன்னார்.

தமிழ் நாட்டிலை உள்ள தமிழர்களின் திறமை, அவைக்கு எண்டு ஒரு

(4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 88, 89
★ விஞ்ஞானப்பிரிவு ★
பௌதிகம்; 88-வெப்பவியல் செவ். 4-15 p.m
89-ஒளியியல் 5-15 p.m.
திரு. சௌந்தி B Sc (Hons)
நிரு டியூசன் சென்றர்
கோண்டாவில்.

# உதயன்

13-07-1987 திங்கட்கிழமை

A/L 88, 89
★ இரசாயனவியல் ★
88-சேதன இரசாயனம் செவ். 3-15
89-பொது இரசாயனம் செவ். 4-15
திரு: செல்வா B. Sc. (Hons)
Niru Tuition Centre
KONDAVIL.

# இந்தியா எதிர்பார்க்கும் புதிய யோசனை என்ன?

கொழும்பு, ஜூலை 13

★ வடக்கு — கிழக்கு மாகாணங்கள் இணைந்த தனி சுயாட்சி அமைப்பு ஒன்று

★ குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னரே இந்த அமைப்பில் தொடர்ந்து இருக்க விருப்பமா? என்பதை அறிய கிழக்கு மாகாணத்தில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

— இந்த அடிப்படையிலான புதிய முயற்சிகளையே கொழும்பு அரசிடம் இருந்து இந்தியா எதிர்பார்க்கின்றது.

—இப்படி தகவலறிந்த கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டிருக்கின்றன.

புதிய முயற்சிகள் எப்படி அமைய வேண்டும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி, ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிய செய்தி இட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை என்றாலும் —

முன்கண்ட விதமான யோசனைகளின் அடிப்படையிலான புதிய முயற்சிகளையே இந்தியா எதிர்பார்ப்பதாக கொழும்பு அரசுக்கு ஏதோ ஒரு வகையில் கூறப்பட்டுவிட்டது.

இந்த அடிப்படையில் இந்தியாவின் இடைமத்தியஸ்தர்கள் சிலர் உத்தியோகப்பற்றற்ற முறையில் கொழும்பு அரசுடன் தொடர்பு கொண்டனர்.

கொழும்பு அரசு இதற்கு இணங்கவில்லை என்று அரசு சார்பு பத்திரிகையான சண்டே ஒப்சேர்வர் செய்தி வெளியிட்டிருக்கின்றது. (உ-எ)

## மனைவி பார்த்திருக்க கணவன் சுட்டுக்கொலை

### மாலி சந்தியில் சம்பவம்

வடமராட்சி, ஜூலை 13

நெல்லியடி மாலி சந்திக்கு அருகில் உள்ள தாரிக்கப்பற்று என்னுமிடத்தில் கடந்த சனியன்று இளம் குடும்பஸ்தர் ஒருவர் மனைவியின் கண்முன்னே படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

வைரமுத்து (வயது 34) என்பவரே இப்படிக் கொலையுண்டவர் ஆவார்.

இப்பகுதியில் சன நடமாட்டம் குறையத் தொடங்கியதை அடுத்து இவர் மனைவியுடன் தமது வீட்டை விட்டு வெளியேற முற்பட்டதாகவும்-

அப்போது அங்கு வந்த படையினர் மனைவியை வீட்டினுள் போகுமாறு கூறியதாகவும்-

மனைவி வீட்டு வாசலில் பார்த்து நிற்க படையினர் வைரமுத்துவை சுட்டுக் கொன்றதாகவும் கூறப்படுகிறது.

சடலத்தை வீட்டுக்கு வெளியே கொண்டு போகக் கூடாது என படையினர் எச்சரித்ததால் சடலம் வீட்டுக்கு முன் வளவிலேயே தகனம் செய்யப்பட்டதாக திருமதி. வைரமுத்து உதயனுக்குக் கூறினார். (உ-160)

## உற்சவம்

குருநகர், ஜூலை 13

குருநகர், புனித கார்மேல் மாதா ஆலய வருடாந்த உற்சவம் இன்று (13-7-87) திங்கள் தொடங்கி தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறும்.

தினமும் காலை 6.15 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

15 ஆம் திகதி புதன் மாலை 6.30 மணிக்கு திருப்பலியும், ஆசீர்வாதமும் நடைபெறும். வியாழக் கிழமை காலை 6 45 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதுடன் வருடாந்தக் கொண்டாட்டங்கள் நிறைவடையும்.

வழமையாக நடைபெறும் மாலை திருவுருவப்பவனி நெருக்கடி நிலைமைகளால் இம்முறை நடைபெறமாட்டாதென பங்குத்தந்தை வண-பிதா ஜெபநேசன் அடிகள் தெரிவிக்கின்றார். (உ-5)

## பணிப்பாளர் திரும்பினார்

யாழ்ப்பாணம், ஜூலை 13

அலஸ் ஆணைக்குழு விசாரணைக்காக கடந்த ஆறும் திகதி கொழும்பு சென்ற யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திரு. எஸ். நச்சினார்க்கினியன் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினார்.

9 ஆம் திகதி இது தொடர்பான விசாரணை நடைபெற்றதாகவும், தொடர்ந்தும் விசாரணை நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் இடம்பெயர்வு

அச்சுவேலி, ஜூலை 13

அச்சுவேலியில் மீண்டும் விமான, ஹெலித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதால் மக்கள் பதற்றமடைந்து அச்சுவேலிப் பகுதியை விட்டு வெளியேறுகின்றனர்.

கடந்த மாதம் நடைபெற்ற இராணுவத்தாக்குதலை அடுத்து மக்கள் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் விமானக் குண்டு வீச்சும் ஹெலித் தாக்குதலும் நடத்தப்பட்டிருப்பது மக்களை பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. (உ11-)

## ஐ.தே.க முடிவு இன்று தெரியும்

கொழும்பு, ஜூலை 13

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற இடைத் தேர்தல்களில் எந்தத் தொகுதிகளில் போட்டியிடுவது?

இது பற்றி ஐ தே.க. செயற்குழு இன்று கூடி தீர்மானிக்கும்.

வவுனியா, மன்னார், திருகோணமலை, பட்டிருப்பு ஆகிய தொகுதிகளில் மட்டுமே ஐ தே.க. போட்டியிடும் என்று ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

வவுனியாவில் மலையகத் தமிழர் ஒருவரும் மன்னாரில் முஸ்லிம் ஒருவரும் நிறுத்தப்படலாம் என்று கூறப்படுகின்றது.

பட்டிருப்பிலும் முஸ்லிம் ஒருவர் ஐ.தே.க. சார்பில் போட்டியிடக் கூடுமாம். (உ-எ)

## தனிமாகாணம் தேவை என கிழக்கு முஸ்லிம்கள் கேட்கவில்லை

### இ. அ. ந முன்னணியினர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 13

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் தமக்கெனத் தனியாக முஸ்லிம் மாகாணம் வேண்டும் என்று அரசை இதுவரை கேட்கவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகிக்கும் ஒரு சில முஸ்லிம் பிரமுகர்கள், தாம் அரசியலில் வந்து பிரபல்யம் அடைவதற்காகவும்—

கிழக்கு மாகாணத்தின் நலனில் அக்கறையில்லாத சில கொழும்பு வாழ் அரசியல் தலைவர்கள் தமது இழந்த செல்வாக்கைப் பெறுவதற்காகவுமே—

தனி முஸ்லிம் மாகாணம் என்ற யோசனையை முன்வைத்திருக்கிறார்கள்.

''இஸ்லாமிய அரசியல் நடவடிக்கை முன்னணி'' யின் தலைவர் டாக்டர் எம். ஏ. எம். ஜலால்தீன், செயலாளர் அல்ஹாஜ் எம். ரி. எம். அனுகர்தீன் ஆகிய இருவரும் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரும் கிழக்கு முஸ்லிம்களின் நிலைப்பாடு குறித்து தமிழ்ப் பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தில் தமிழ்—முஸ்லிம் மக்கள் நீண்ட காலமாக ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

அங்கு முஸ்லிம் மாகாணம் அமையுமானால் அது நிரந்தரப் பகைக்கு அத்திவாரம் இடும்.

தமிழ்—முஸ்லிம் ஒற்றுமையைக் குழப்புமுகமாக முஸ்லிம் மக்கள் மத்தியில் அரசாங்கமும் அதன் அடிவருடிகளும் முஸ்லிம் மாகாணம் குறித்துத் தீவிர பிரச்சாரத்தினை மேற்கொண்டுள்ளனர்.

தனி முஸ்லிம் மாகாணத்தால் முஸ்லிம்கள் பெரிதாக நன்மை அடையப்போவது எதுவும் இல்லை. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு மாகாண சபையோ, அல்லது சமஷ்டியோ தீர்வாக முன் வைக்கப்படின் அதனை நாம் முழுமையாக வரவேற்போம்—

இப்படி அவர்கள் தெரிவித்தனர்.

டிச. 19 யோசனைகள் குறித்தும், தனி முஸ்லிம் மாகாணம் தேவையற்றது என்பது குறித்தும் இவர்கள் இந்தியத் தூதுவர் திரு.ஜே என். டிக்ஸிற்றுடனும் தமது முன்னணியின் தூதுக்குழு ஒன்று அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ-10)

## டிச. 19 யோசனைக்கு நடந்தது என்ன?

### லலித் தெரிவிக்கும் ஆச்சரியம்

கொழும்பு, ஜூலை 13

டிசம்பர் 19 யோசனைக்கு என்ன நடந்தது என்பதுதான் எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது.

இப்படிக் கூறினார் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி.

கொழும்பு 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு அவர் பேட்டி ஒன்றை அளித்தார்.

அந்தப் பேட்டியில் அமைச்சர் கூறியிருந்ததாவது:-

இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் புதிய யோசனைகளைக்கொண்டுவர எந்த நேரமும் எமது அரசு முயற்சித்துக்கொண்டு தான் இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இதுகாலவரை எந்த யோசனைகளையும் சமர்ப்பிக்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

புதிய முயற்சிகள்பற்றி விரைவான பதிலை எம்மிடமிருந்து இந்தியா எதிர்பார்க்கின்றது. ஆனல் அதற்கு காலக்கெடு எதையும் இந்தியா விதிக்கவில்லை.

கேள்வி: இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவைத் தொடர்ந்து மத்தியஸ்தராகக் கருதுகிறீர்களா?

லலித்; இது பற்றி கருத்துத் தெரிவிக்க முடியாது.

கேள்வி: இந்தியாவை மிரட்டுபவராக நீங்கள் கருதுகின்றீர்களா?

லலித்: மிரட்டுபவராக நான் கூறமாட்டேன். ஆனல் உலகம் அப்படிக் கூறுகின்றது.

கேள்வி: டிசம்பர் 19 யோசனையின் நிலை என்ன?

லலித்;டிசம்பர் 19யோசனைக்கு என்ன நடந்துவிட்டது என்பதுதான் எனக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது.

பேச்சுகளுக்கான நல்ல அடிப்படை டிசம்பர் 19 யோசனை என்று இந்திய அரசே சொன்னது.

இந்த யோசனைகளை இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகளிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கவில்லை.

இருந்தும் இந்த யோசனை போதுமானவை அல்ல என்று கூறி புலிகள் நிராகரித்துவிட்டனர். (உ-எ)

## பண்டத்தரிப்பில் ஷெல்!

பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டு ஒன்று பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வீதியில் உள்ள செட்டிக்குறிச்சி என்னும் இடத்தில் வீட்டு வளவு ஒன்றில் வந்து விழுந்து வெடித்தது.

இதனுல் சில வீடுகள் சேதமுற்றன:

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 9 மணியளவில் நடந்தது.

ஓய்வு பெற்ற ரயில் நிலைய அதிபர் திரு. சி. செல்லப்பு என்பவர்ஷெல் தாக்குதலினுல் மயக்கமுற்றார்.

திருமதி. ரா பி கருணைந்தன் என்பவரின் வீடும்சேதமுற்றது.

தெய்வாதீனமாக உயிரிழப்பு எதும் ஏற்படவில்லை. (உ-161-10)

## வல்வையிலும் மோதல்!

வடமராட்சி, ஜூலை 13

மண்டான், வல்வெட்டித்துறை இராணுவ முகாம்களிலிருந்து வெளியேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று கடும் தாக்குதல் நிகழ்த்தி அவர்களைத் திருப்பி அனுப்பினர்.

வல்வை அம்மன் கோயிலுக்குப் பின்னல் ஆலடி என்னுமிடத்தில் உள்ள புலிகளின் சென்றியிலிருந்தே கடும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் படையினர் தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டதாகவும்—

புலிகள் தரப்பில் இருவர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது. (உ-160)

## மாங்காய் பறிக்க சென்றவரின் உயிரை இராணுவம் பறித்தது

யாழ்ப்பாணம், ஜூலை13

மாங்காய் பறிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவரின் உயிரை இராணுவம் பறித்தது.

சனிக்கிழமை பகல் செல்லர் இரத்தினம் (வயது 40) என்பவர் ஏற்கனவே இராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த விமன்காமம் பாடசாலை அதிபர் சிவராசாவின் வீட்டு வளவினுள் மாங்காய் பிடுங்கச் சென்றார்.

அப்பொழுது பொது மக்கள் இல்லாத வீடு ஒன்றினுள் மறைந்து இருந்தஇராணுவத்தினர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனுல் நெஞ்சிலும் கையிலும் காயமடைந்த அவர், யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதன் பின் நேற்று மரணமானார்.

இவரது மரண விசாரணையை யாழ். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினார்.

காலஞ்சென்றவர் ஆறு பிள்ளைகளின் தந்தை. (உ-10)

## முண்டைதீவில் அடிக்கடி தரையிறங்கிய ஹெலிகள்

குருநகர், ஜூலை 13

நேற்றுக் காலை தனியாகவும், சோடியாகவும் இரு ஹெலிகொப்டர்கள் பல தட்வைகள் மண்டைதீவு 'மினி' முகாமுக்கு வந்து சென்றன.

ஹெலிகள் வந்து சென்ற வேளையில் கோட்டை முகாமில் இருந்து நகரப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது.

நேற்று வடமராட்சியில் அடுத்த கட்ட இராணுவப் படையெடுப்பு நடத்துவதற்காகக் கோட்டை, மண்டைதீவு முகாம்களில் இருந்து சிப்பாய்களை அங்கு கொண்டுசெல்லும் நடவடிக்கையாகவே காலையில் இரு ஹெலிக்கொப்டர்களும் அடிக்கடி மண்டைதீவு 'மினி' முகாமில் தரை இறங்கிச் சென்றதாக நம்பப்படுகிறது. (உ-ரி)

## அரசியல் கைதிகள் மட்டுமே வெலிகடையில்

கொழும்பு, ஜூலை 13

தமிழ், சிங்கள அரசியல் கைதிகள் மட்டுமே இனி வெலிக்கடை மகஸின் சிறைச்சாலையில் வைக்கப்படுவர்.

ஏனைய குற்றங்களுக்காக இதுவரை காலமும் மகஸின் சிறையில் வைக்கப்பட்டிருந்தவர்கள், வேறு விளக்கமறியற் கூடங்களுக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டனர்.

தென் இலங்கையில் கைது செய்யப்பட்ட சுமார் 60 சிங்கள அரசியல் கைதிகளும் மகஸின் சிறையில் வைக்கப்படுவர்.

அவசரகாலத் தடுப்புச் சட்டத்தின்கீழும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழும் 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரையான தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

—இப்படி 'ஐலண்ட்' ஞாயிறு இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

## கலிகைச் சந்தி நோக்கி சென்ற படையினர் மீது தாக்குதல்

நேற்று வடமராட்சி யாக்கரை மினி முகாமிலிருந்து கலிகைச் சந்தியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த படையினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பலசிப்பாய்கள் காயங்களுடன் ஒருவாறு தப்பி முகாமைச் சென்றடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஏற்பட்ட மேலதிக சேத விவரம்பற்றி ஊர்ஜிதப் படுத்தப்பட்ட தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

### பாரமில்லாத - - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

நொவேஸ் கோட்டிய அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

கடந்த ஆண்டிலும் சுமார் 150 இலங்கைத் தமிழ் அகதிகள் கப்பல் ஒன்றில் கொண்டு செல்லப்பட்டு நடுக் கடலில் உயிர்காக்கும் படகுகளில் அத்திலாந்திக் கடலில் இறக்கி விடப்பட்டதும்—

பின்னர் அவர்கள் கனடாவின் நியூபவுண்ட்லாந்து நகரை அடைந்ததும் தெரிந்ததே. (உ-எ)

### வித்தாரம்...

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆட்சி, அதிகாரம், ரேடியோ, ரி. வி. எண்டு இருக்கிறபடியால், உலகத்திலை கொடி கட்டிப் பறக்குது.

இஞ்சை இந்த நாட்டுத் தமிழருக்கு இருக்கிற திறமை எல்லாம் மழுங்கடிக்கப் படுகுது.

எங்கடை பிள்ளையளைத் தடுப்புமுகாம்களுக்குள்ளை தள்ளிச் சித்திரவதை செய்து அதுகளின்ரை திறமை எல்லாத்தையும் வேரோடு எடுக்கிறாங்கள்:

எல்லாச் சந்தர்ப்பமும் பெரும்பான்மைச் சமூக ஆக்களுக்குத்தான்.ரி.வி. ரேடியோவிலையும் அவையின்ரை நிகழ்ச்சியள், திறமையளுக்குத் தான் இடம்! காலம் எப்ப மாறுமோ?

கொண்டாடி

### பொலிகண்டி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கி பெரும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் பல வீடுகள் பெரும் சேதமுற்றன. சில வீடுகள் எரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-160)

### டிச.19 யோசனை...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

பேச்சுக்கள் பற்றி இரு தரப்பினரும் மௌனஞ் சாதித்தனர்.

இதனிடையில் இச் சந்திப்புக்கள் நடந்தனவா? இல்லையா என்பது பற்றி கருத்துத் தெரிவிக்க இந்தியத்தூதர் மறுத்துவிட்டார். (உ எ)

### இடைக்காட்டில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விமானங்களில் இருந்து பீப்பாய் குண்டு வீச்சும் நடந்த வண்ணம் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளினுல் பின் வரும் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

★ 40 எம். எம்- கிரனேட் பிஸ்டல் (எச். கே) - 1

★ ரி-56 ரக ரைபிள்கள் - 4

★ ஏகே ரக ரவைகள் ஐநூறுக்கும் மேல்.

★ 40 எம். எம். ஷெல்கள் -03 (உ-160-119)

### முல்லைத்தீவில் - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலிக்கொப்டர்களும் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி கடும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஏராளமான பொது மக்கள் காடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். பலர் வெளியூர் நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர்.

போராளிகள், சிப்பாய்கள், பொதுமக்கள் தரப்பில் ஏற்பட்ட இழப்புகள் பற்றி இச்செய்தி [illegible] ஏதும் கிடைக்கவில்லை. (உ-10)

### ஊர்வலம் . . .

(1-ம் பக்க தொடர்ச்சி)

நிலையம் ஆகியவை கூட்டாக இணைந்து இந்த ஊர்வலத்தை நடத்தின.

ஓட்டுமடம் ஆரம்பப் பகுதியில் இருந்து ஆரம்பமான ஊர்வலமும் கல்லட்டியில் இருந்து ஆரம்பமான ஊர்வலமும் ஒன்றிணைந்து ஞானம்ஸ் ஹோட்டல் முன்னால் முடிவடைந்தது.

இறுதியில் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு [illegible] ஒன்றும் இந்திய செஞ்[illegible] பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. (உ-10)

## பிரயாண ஒழுங்குகள்

● கனடா

கனடா நாட்டிற்கு விசா, பிரயாணச் சீட்டு உடனடியாக ஒழுங்கு செய்து தரப்படும்.

பாஸ்போட், பொண்ட், பிரயாணச் சீட்டுக்கள் இந்தியன் விசா.

நிப்பொன் ரெஸி ரவல்ஸ்

2 G, ஸ்ரான்லி வீதி, - - யாழ்ப்பாணம்.

(3217)

இப் பத்திரிகை—நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 13-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Monday July 13, 1987

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org